

உமர் பல் மருத்துவமனையின் சார்பில் மருத்துவர்.உமர் அவர்கள் மாணவிக்கு பல் மருத்துவ பரிசோதனை செய்கிறார்.



தேசிய அளவில் நடைபெற்ற பளு தூக்கும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவி ஹெப்சிபா



கொடைக்கானால் மலைப் பகுதியில் மலையேற்ற பயிற்சியில் ஈடுபடும் மாணவர்கள்



இரு சக்கர வாகனங்களுக்கான சக்கரம் தயாரிக்கும் தொழிற்சாலையை பார்வையிடுதல்

வயல் நிலத்தில்
ஆனந்தமாய்க் குளிக்கும் மாணவர்கள்






## உலக மனநல நாள்



அக்டோபர் 10 ஆம் தேதியன்று நமது பள்ளியும், ஜே.ஸி.ரெஸிடென்ஸி ஹோட்டலும் இணைந்து மாவட்ட அளவிலான போட்டிகளை உலக மனநல நாளன்று நடத்தி வருகின்றது. இப்போட்டிகளில் மதுரை மாவட்டத்திலுள்ள 15 சிறப்பு பள்ளிகளை சார்ந்த 120 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். இவ்வருட கருப்பொருளை **திரு.M.S.விக்ரம்** நிர்வாக இயக்குனர் - விக்ரம் பொறியியல் கல்லூரி அவர்கள், வெளியிட்டார்கள். அதன் முதல் பிரதியை **திரு.J.முரளி கிருஷ்ணன்**, நிர்வாக இயக்குனர் - கல்யாணி அஸோசியேட்ஸ் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். உடன் ஜே.ஸி.ரெஸிடென்ஸி இயக்குநர் **திரு.J.ரிஷ்வந்த்** மற்றும் மதுரை, நெக்ஸ்டு ஜென் ரோட்டரி சங்க தலைவர் **திரு.அமர் ஓரா** அவர்கள் உள்ளனர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் மதுரை மாவட்ட காவல்துறை கண்கானிப்பாளர் **உயர்திரு.N.மணிவண்ணன்** அவர்கள் பாராட்டுச் சான்றிதழும், பரிசுகளும் வழங்கி கௌரவித்தார்கள்.






நமது பள்ளியானது தற்போது தரை தளத்தில் மட்டுமே இயங்கி வருகிறது. அநேக புதிய குழந்தைகள் பள்ளியில் சேர்க்க இயலாத நிலை உள்ளதால், மாடியில் 5 வகுப்பறைகள் கட்ட திட்டமிட்டு நன்கொடைகள் மூலம் கட்டிட பணிகள் நடைபெற்று வருகிறது. பள்ளியின் எதிர்கால முகப்புத் தோற்றம்.

### தொடர்பு முகவரி

**பெத்சான் சிறப்பு பள்ளி**
( மனவளர்ச்சி குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கானது )
தமிழக அரசின் அங்கீகாரம் பெற்றது & மத்திய அரசின் பதிவு பெற்றது
828, சிக்கந்தர் சாவடி, மதுரை - 625 018.
Phone : 0452 - 2 660 770 ; 98949 28666 ; 9894476662
E-mail : bethshanschool@gmail.com
F : www.facebook/bethshanschool | Website : www.bethshanschool.org



# நிகழ்வுகள்

2017
ஆண்டு அறிக்கை

**BETHSHAN**
SPECIAL SCHOOL

பேரன்புடையீர்,

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பெத்சான் சிறப்பு பள்ளியின் வாழ்த்துக்கள். பெத்சான் சிறப்பு பள்ளியானது கடந்த 21 ஆண்டுகளாக மதுரை, சிக்கந்தர் சாவடியில் அறிவுத்திறன் குறைந்த மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்விற்காக செயல்பட்டுவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். கடந்த ஆண்டில் பள்ளியில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளை தொகுத்து ஆண்டறிக்கையாக உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் பள்ளி மாணவர்களின் நலனுக்காக நீங்கள் தாராளமாக செய்து வரும் அனைத்து உதவிகளுக்கும் எங்களது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். பெத்சான் பள்ளியின் மூலம் நடைபெற்று வரும் சமூக பணியில் நீங்களும் எங்களோடு இணைத்துக் கொண்டமையால் கடவுள் நிச்சயம் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் மெய்யான ஆசீர்வாதங்களைத் தந்து ஆசிர்வதிப்பார்.

நீங்கள் இக்குழந்தைகள் மீது காண்பித்து வரும் அன்பையும், உதவிகளையும் எதிர்வரும் நாட்களிலும் தொடர்ந்து செய்திட உங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இச்சிறப்புக் குழந்தைகளோடு உங்கள் அன்பை பகிர்ந்து கொள்ள எமது பள்ளிக்கு வருகை தருமாறு அன்புடன் அழைக்கிறேன். உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

நன்றி.




புத்தாண்டு
நல்வாழ்த்துகள்

சமூக பணியில்,
R.ரவிக்குமார்
முதல்வர்

## குடியரசு மற்றும் சுதந்திர தினவிழா



குடியரசு தினத்தன்று பெனிட் & கோ, செயல் இயக்குனர், **திரு.பிரின்ஸ்** அவர்கள் தேசிய கொடியை ஏற்றி, வாழ்த்துரை வழங்கினார்கள்.



நமது பள்ளியில் நடைபெற்ற 67 வது சுதந்திர தினவிழாவின்போது **திரு.ராம் பிரகாஷ்** இயக்குநர், தியாகராஜன் அக்ரோ புராடக்ஸ் பி. லிட்., அவர்கள் தேசிய கொடியை ஏற்றி, வாழ்த்துரை வழங்கினார்கள்.

## சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி




மதுரை மாவட்டத்திலுள்ள அனைத்து சிறப்பு பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு மத்திய அரசினால் சமீபத்தில் இயற்றப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமை சட்டம்-2017 பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியை மதுரை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் நீதிபதி அவர்கள் விளக்குகிறார்.

## பெற்றோர் ஆலோசனைக் கூட்டம்



நமது பள்ளியில் நடைபெற்ற பெற்றோர் ஆலோசனை கூட்டத்தில் மதுரை இராஜாஜி மருத்துவமனையின் உளவியல் நிபுணர் **திரு.சுரேஷ்குமார்** அவர்கள் நடத்தைப் பிரச்சினைகளை கையாளும் முறை பற்றி விளக்குகிறார்.

## சிறப்பு ஒலிம்பிக் நிறுவனர் தினம்

சர்வதேச சிறப்பு ஒலிம்பிக் அமைப்பின் நிறுவனர் திருமதி.யூனிஸ் கென்னடி ஸௌரீவர் அவர்களின் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. அதில் சிறப்பு விருந்தினராக சென்ட்ரல் பாங்கு ஆப் இந்தியாவின், எல்லிஸ்நகர் கிளை மேலாளர் **திரு.R.ராஜசேகரன்** அவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களை பாராட்டி பேசினார்கள்.







2 நாள் தேசிய கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு தமிழவேள் திரு.பி.டி.ராஜன் அறக்கட்டளையின் அறங்காவலர் திரு.M.**திருமூர்த்தி** அவர்கள் சான்றிதழ் வழங்கினார்



5 நாள் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்களுக்கு மதுரை மேற்கு ரோட்டரி சங்கத்தின் தலைவர் **திரு.ராஜ்குமார்** செயலாளர் **திரு.ராமநாதன்** இணைந்து சான்றிதழ் வழங்கினார்கள்



## சிறப்பு ஒலிம்பிக் செய்திகள்

நமது பள்ளி மாணவர்கள் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெற்ற பல்வேறு சிறப்பு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு எண்ணற்ற வெற்றிகளை பெற்று வந்துள்ளனர். அதில் கைப்பந்து, பளுதூக்கும் போட்டி, டேபிள் டென்னிஸ், கால்பந்து, சைக்கிள் போட்டி மற்றும் தடகள போட்டிகள்.



தேசிய அளவில் ஆக்ராவில் நடைபெற்ற சிறப்பு ஒலிம்பிக் கைப்பந்து போட்டியில் வெள்ளிப் பதக்கம் மற்றும் மாநில அளவிலான சைக்கிள்போட்டியில் வெற்றி பெற்ற நமது பள்ளி மாணவர்களை மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.வீரராகவராவ்** இ.ஆ.ப. அவர்கள் பாராட்டினார்கள். உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பிரம்மநாயகம், சமூகசேவகர் திரு.மாணிக்கம், பள்ளி முதல்வர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் உள்ளனர்.



தேசிய அளவிலான பளு தூக்குதல் மற்றும் டேபிள் டென்னிஸ் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவிகளை வடமலையான் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் Dr.**புகழகிரி வடமலையான்** அவர்கள் பாராட்டினார்கள்.



செல்வி.ராஜ தர்ஷினி அவர்கள், என்லைட் அறக்கட்டளையின் சார்பாக விளையாட்டு வீரர்களுக்கு டி-சர்ட் மற்றும் டிராக் பேன்ட் வழங்குகிறார்.



மாநில அளவில் புதுக்கோட்டையில் நடைபெற்ற சைக்கிள் ஓட்டும் போட்டியில் தங்கம் வென்ற மாணவி திவ்யபாரதியை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பாராட்டினார்கள்.

## சிறப்பு பள்ளி ஆசிரியர்களுக்கான தேசிய அளவிலான கருத்தரங்கு மற்றும் பயிற்சி வகுப்புகள்

மத்திய அரசின் மறுவாழ்வு கவுன்சில், புதுதில்லி ( RCI ) - பல்வகை ஊனமுற்றோர்க்கான தேசிய மையம், சென்னை ( NIEPMD ) மற்றும் நமது பள்ளியும் இணைந்து ( Continuing Rehabilitation Education Program ) 2 நாள் தேசிய அளவிலான கருத்தரங்கு மற்றும் 5 நாள் பயிற்சி வகுப்புகளை நடத்தினோம். இக்கருத்தரங்கினை இந்திரா காந்தி திறந்தநிலை பல்கலைக்கழகம் மற்றும் சி.எஸ்.ஐ. ஜெயராஜ் அன்னபாக்கியம் செவிலியர் கல்லூரியுடன் இணைந்து நடத்தியது. இதில் தமிழகம் மற்றும் கேரளா மாநிலத்திலிருந்து 130 சிறப்பாசிரியர்கள் மற்றும் நிபுணர்கள் கலந்து கொண்டனர்.



உலக தாத்தா பாட்டி தினத்தன்று நமது மாணவர்களின் தாத்தா பாட்டிகள் உற்சாகமாய் கலந்து கொண்ட கலை நிகழ்ச்சிகள்.



நமது பள்ளியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் நமது மாணவர்கள் பங்குபெற்ற கலை நிகழ்ச்சிகள்.



உள்ளடங்கிய கல்வித்திட்டம் பற்றியதான தேசிய அளவிலான கருத்தரங்கினை அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், நமது பள்ளி மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தியது.